# NEWS LETTER

## December

Vivekananda Community Foundation


Contact Us !

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569




## வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கான தற்காலிக வதிவிடம்

டித்வா புயல் மற்றும் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தேவைப்பாடுடைய பயனாளிகளுக்கு எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவிற்க்குட்பட்ட மங்கிகட்டு எனும் கிராமத்தில் அமைந்துள்ள குடும்பம் ஒன்றின் களிமண் வீடு முற்றாக சேதமடைந்த நிலையில் எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினால் தற்காலிக வதிவிடம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.

மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தினூடாக கிடைக்கப்பெற்ற கோரிக்கைக்கமைவாக முன்னெடுக்கப்பட்ட இச்செயற்பாட்டில் பிரதேச செயலகத்தின் ஊழியர்களும் கலந்துகொண்டு பங்களிப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.






## முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 173 வது நினைவு தினம்







அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 173 வது நினைவு தினம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் தலைவர் திரு.பொன் பேரின்பநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நிலையத்தின் ஆலோசகர், உள்ளக கணக்காய்வாளர், முகாமையாளர், உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பிள்ளைகள் பெற்றார்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வில் இலண்டனைச் சேர்ந்த ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் காலநிலை அனர்த்தத்தின் மூலம் பாதிக்கப்பட்ட எமது நிலைய பிள்ளைகளுக்கும் பணியாளர்களுக்கும் உலர் உணவுப்பொதி வழங்கப்பட்டது.






## 70 இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 வருடங்களுக்கு மேலாக இளைஞர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல் எனும் தொனிப்பொருளில் பல்வேறுபட்ட செயற்பாடுகளை விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியானது சமூகத்தின் மத்தியில் மேற்கொண்டு வருகின்றது.

அதனடிப்படையில் இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியானது மண்முனைப்பற்று பிரதேச செயலக உறுப்பினர் பா.கிஸ்காந்தமுதலி மற்றும் இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியினாரால் மட்டக்களப்பு, ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இப்பயிற்சியில் இளைஞர்களுக்கு தலைமைத்துவ பண்புகள் மற்றும் பொறுப்புக்களின் முக்கியத்துவம், செயல், சொல், பார்வைக்கோணம் என்பவற்றை கட்டுப்படுத்துவதன் மூலம் தனிமனித வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் நேரத்தினை சரியான முறையில் பயன்படுத்துவதன் அவசியம் பற்றியும் சமூக நோக்கத்திற்காக செயற்படும் போது குழு செயற்பாட்டின் முக்கியத்துவம் பற்றியும் பல்வேறுபட்ட செயற்பாடுகளின் மூலம் சிறப்பான முறையில் தெளிவூட்டப்பட்டது.

இச்செயலமர்வில் மண்முனைப்பற்று பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட கிராம சேவைப்பிரிவுகளில் வசிக்கும் 70 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பற்குபற்றி பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## TOP NEWS

# விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2025ம் ஆண்டுக்கான வருடாந்த மீளாய்வுக் கலந்துரையாடல்.




விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில், விவேகானந்த குடும்பத்தினரின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மீளாய்வுக் கலந்துரையாடல் சிறப்பாக நடைபெற்றது. விவேகானந்த குழுமத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி, விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, அமிர்தா மற்றும் சமுதாயக்கல்லூரிகள் உள்ளிட்ட எமது அனைத்து கிளை நிறுவனங்களின் நிர்வாகிகள், சேவையாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




இக்கலந்துரையாடலின் போது, 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகள், கல்வி மற்றும் சமூக சேவைகளில் அடைந்த முன்னேற்றங்கள், நிதி மற்றும் நிர்வாக அடைவுகள் குறித்து விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டதோடு ஒவ்வொரு அமைப்பும் கடந்த ஆண்டு காலப்பகுதியில் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அவற்றை எதிர்கொள்ள எடுத்த நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2026 ஆம் ஆண்டிற்கான எதிர்காலத் திட்டங்கள், புதிய வளர்ச்சி முயற்சிகள், கல்வித் தர மேம்பாடு மற்றும் சமூக சேவைகளை மேலும் விரிவுபடுத்தும் வழிமுறைகள் குறித்தும் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

# செங்கலடி பிரதேச இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி




செங்கலடி பிரதேசத்தின் இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியானது செங்கலடி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியினாரால் முன்னெடுக்கப்பட்டது.

இப்பயிற்சியில் இளைஞர்களுக்கு தலைமைத்துவ பண்புகள் மற்றும் இலக்குகளின் முக்கியத்துவம், மூலம் மனித வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் சரியான முறையில் திட்டமிடுவதன் அவசியம் பற்றியும் சிறப்பான முறையில் தெளிவூட்டப்பட்டது.

**நன்கொடையாளரின் பிறந்த தினத்தை முன்னிட்டு.....**

எமது அறக்கட்டளையுடன் இணைந்து செயற்படும் நன்கொடையாளராகிய Ms. Aurelie PHOUDIAH (Member of Fanoamoa Committee) அவர்களின் பிறந்த தினம் ஆரையம்பதியில் அமைந்துள்ள புகலிடத்தில் பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுடன் இணைந்து கொண்டாடப்பட்டதோடு மாணவர்களுக்கான சத்துணவுப் பொதிகளும் வழங்கிவைக்கப்பட்டது. அவ்வாறே, Aurelie PHOUDIAH அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகளும் நடப்பட்டது.







## 2026 ம் ஆண்டிற்கான மாணவர்களின் ஆரம்ப நிகழ்வு






விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி பற்றிய அறிமுகம், கல்லூரியின் செயற்பாடுகள் தெளிவூட்டப்பட்டதோடு இலங்கையின் தேசிய உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தினால் வழங்கப்படுகின்ற NVQ தரச்சான்றிதழின் முக்கியத்துவம் மற்றும் அதற்கான தொழில்வாய்ப்புக்கள் பற்றியும் இக்கால தொழில்நுட்பம் தொடர்பான தெளிவூட்டப்பட்டது.

**காரைதீவு சமுதாயக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான இறுதி மதிப்பீடு**

மனித நேய நம்பிக்கை நிதியத்தினரின் அனுசரணையில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட காரைதீவு பிரதேசத்தில் இராமகிருஸ்ண மிஷன் அன்னை சாரதா மேம்பாட்டு பயிற்சி நிலையத்துடன் இணைந்ததாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற VCOT Computer Learning Unit இன் Office management & IT முதலாவது தொகுதி பயிலுனர்களுக்கான இறுதி மதிப்பீடு விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியினரால் நடாத்தப்பட்டது.

15 பயிலுனர்கள் தோற்றிய இம்மதிப்பீட்டு பரீட்சையில் அவர்களுக்கான Word, Excel, PowerPoint உள்ளடங்கலாக Office package அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதோடு பயிலுனர்களினால் அவர்கள் கற்றுக்கொண்ட விடயங்களின் அடிப்படையிலான நிகழ்த்துகை இடம்பெற்றது.






விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது.

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்
- புகலிடம் (சத்துணவுப் பொதிகள்)



இவ்வாறு எமது சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நீங்களும் உங்களால் முடிந்த உதவியை வழங்குவதன் மூலம் எமது சமூக வலுவூட்டலில் பங்களிப்பை மேற்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

## Donation – Request details

**Annai Sri Sarada Center**
Special Meal per Day
- LKR 40,000

**Sponsor a Pre-School**
per Month
- LKR 65,000

Nutritious Food per Child
- LKR 3,000

**Jeevananda Girls Home**
Special Meal per Day
- LKR 20,000

**Nandavanam Elders Home**
Special Meal per Day
- LKR 15,000

**Sponsor a Youth**
per Technician
- LKR 10,000

**Sponsor a Student**
per Month
- LKR 3,500

**Nutrion Pack for Pugalidam Disables Center**
per Pack
- LKR 3,500

**Education Materials For School students**
per Pack
- LKR 5,000